Aparajitha

# வெற்றியின் விதைகள்

## காலாண்டுச் செய்திமடல்

## அக்டோபர் - திசம்பர் 2019



வாழ்க்கைத் திறன்களின் வழியாக நிலைமாற்றம்

32

இதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்

# வணக்கம்!

மாணவர்களுக்கு எது தேவையென்பதை அறிந்து அதனை வழங்க அலுவலர்கள் விரைந்து செயற்படும்பொழுது, அவற்றின் விளைவுகளும் விரைவில் வெளிப்படுகின்றன. அத்தகு முயற்சிகளைப் பற்றித்தான் இம்மடலின் முதல் மூன்று பதிவுகளும் பேசுகின்றன. வாழ்க்கைத்திறன் கல்வி, வளரிளம் பருவ மாணவர்களிடம் ஆசிரியரிடமும் ஏற்படுத்தி இருக்கும் நடத்தை மாற்றங்களைப் பற்றிக் கூறுகிறது நான்காவது பதிவு. கூடுதலாக அக்கல்வி மனப்பாங்கை பண்படுத்துவதோடு முறைசார் கல்விக்கும் துணையாக இருப்பதை அப்பதிவு சுட்டிக்காட்டுகிறது. முறைசாராக் கல்விக்கூடங்களிலும் வாழ்க்கைத்திறன் கல்வி நிகழ்த்தும் மாற்றங்களைச் சொல்கிறது ஐந்தாவது பதிவு.

ထ ထ ထ ထ

கடந்த எட்டு ஆண்டுகளாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இத்திட்டத்தின் செயல்பாடுகள், வளர்ச்சி, விளைவு ஆகியன பற்றிய செய்திகளோடு தங்களை வந்தடைந்த “வெற்றியின் விதைகள்” என்னும் இச்செய்திமடல் (News Letter) 2020 சனவரி முதல் செய்தித்தொகுப்பாக (News Bulletin) தங்களை வந்தடைய உள்ளது. அச்செய்தித்தொகுப்பில் ஓரிரு வரிகளில் செய்திக்குறிப்பும் அதனைப் பற்றி விரிவாக அறிந்துகொள்வதற்கு ஏதுவாக அஃது இடம்பெற்றுள்ள வலைப்பக்கத்தின் (Web page) உரலியும் (URL) பின்வருமாறு வழங்கப்பட்டிருக்கும்.

ஹரியானா மாநில கல்வித்துறை 6, 7, 8ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான சாகச முகாமை செப்டம்பர் 16ஆம் நாள் முதல் அக்டோபர் 7ஆம் நாள் வரை காட்பூரி என்னுமிடத்தில் ஒருங்கிணைத்தது. அம்முகாமில் டிம் டிம் தாரே பாடங்கள் ஒளிபரப்பப்பட்டன.
https://www.aparajitha.org/tim-tim-tare-adventure-camps-in-haryana/

*தொடர்ந்து தங்களின் ஆதரவையும் ஆலோசனையையும் எதிர்நோக்கும்,*
***ஆசிரியர் குழு***

## உள்ளடக்கம்


வணக்கம் . . . . . . . . . . . . . . . . . . . 2

இராஜஸ்தானில் . . . . . . . . . . . . . . . 3

ஹிமாசல் பிரதேசத்தில் . . . . . . . . . . . 4

ஹரியானாவில் . . . . . . . . . . . . . . . . 4

குஜராத்தில் . . . . . . . . . . . . . . . . . . . 5

தமிழ்நாட்டில் . . . . . . . . . . . . . . . . . . 7

எதிரொலிகள். . . . . . . . . . . . . . . . . . . 8



*அபராஜிதா அறக்கட்டளை*
*5அ, வி.பி.இரத்தினசாமி சாலை*
*பீபீ குளம்*
*மதுரை 635002*

*0452-4375252*

info@aparajitha.org

# இராஜஸ்தானில் . . .

“கல்வி மற்றும் ஆராய்ச்சி இணையம்” (ERNET - Education and Research Network) என்னும் அமைப்பு இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி பெற்ற அறிவியல் நிறுவனம் ஆகும். இந்த அமைப்பின் வழியாகவே தற்பொழுது இராஜஸ்தான் மாநிலத்தின் கல்வி ஒளிபரப்பு மேற்கொள்ளப்படுகிறது.

எனவே, தளிர்த்திறன் திட்டத்தின் இந்திவடிவமான டீம் டீம் தாரேவை இந்நிறுவனத்தின் வழியாக ஒளிபரப்ப இராஜஸ்தான் மாநில கல்வித்துறை முதன்மைச்செயலாளர் **டாக்டர் ஆர். வெங்கடேஸ்வரன் இ.ஆ.ப.** ஆணையிட்டார். அதனடிப்படையில் தொடக்கக்கல்வி இயக்குநர் திருமிகு **ஓம்பிரகாஷ் கசேரா இ.ஆ.ப.** டீம் டீம் தாரே பாடங்களை 33 மாவட்டங்களிலுள்ள 34 மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (Districts Institute of Education & Training - DIET) வழியாக ஒளிபரப்ப 2018 ஆகஸ்ட் 2ஆம் நாள் ஆணையிட்டார்.






அந்த ஆணைகளின் விளைவாக 2019 ஆகஸ்ட் 28ஆம் நாள் உதய்பூர் மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் அம்மாவட்ட ஆட்சியர் திருமிகு **ஆனந்தி இ.ஆ.ப.** முன்னிலையில் டீம் டீம் தாரேவின் முதல் ஒளிபரப்பைத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து பிற மாவட்டங்களிலுள்ள பயிற்சி நிறுவனங்களும் தமது ஒளிபரப்பினைத் தொடங்கியுள்ளன. இவ்வகையில் 33 மாவட்டங்களிலுள்ள 1320 பள்ளிகளில் பயிலும் சுமார் 4,16,000 மாணவர்கள் வாழ்க்கைத்திறன் கல்வியைப் பெறுகிறார்கள்.

# ஹிமாசல் பிரதேசத்தில் . . .




டிம் டிம் தாரே திட்டத்தை ஹிமாசல் பிரதேசத்தில் செயற்படுத்த 2019 மார்ச் 5ஆம் நாள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. சூன் 13ஆம் நாள் முதல் சூலை 25ஆம் நாள் வரை ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அம்மாநிலத்திலுள்ள 12 மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன மையங்களில் பணியாற்றும் செய்தி மற்றும் தகவல்தொடர்பு அலுவலர்களின் வழியாக டிம் டிம் தாரே திட்டத்தின் காணொளிப் பாடங்கள் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 12ஆம் நாள் கல்வி இயக்குநரகத்தில் மாநில திட்ட இயக்குநர் திருமிகு **ஆஷிஷ் கோஹ்லி ஹ.ஆ.ப** முன்னிலையில் நடைபெற்ற மாநில அளவிலான கூட்டத்தில் மாவட்டத் திட்ட அலுவலர்களுடன், வட்டார வளமைய அளவிலான வாழ்க்கைத்திறன் கல்வி மற்றும் டிம் டிம் தாரே பற்றிய பயிற்சி குறித்து விவாதிக்கப்பட்டது

# ஹரியானாவில் . . .

ஹரியனா மாநில கல்வித்துறையால் டிம் டிம் தாரே காணொளிப்பாடங்கள் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குத் தொடர்ந்து ஒளிபரப்பப்படுகின்றன. ஒவ்வோராண்டும் அம்மாநிலக் கல்வித்துறை, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு சாகச முகாங்களை நடத்துவது வழக்கம். அவ்வகையில், இவ்வாண்டும் செப்டம்பர் 16ஆம் நாள் முதல் அக்டோபர் 7ஆம் நாள் வரை 4 பிரிவுகளாக பல்வால் மாவட்டம் காட்பூரி என்னுமிடத்தில் அமைந்துள்ள தேசிய இளையோர் சாகசப் பயிற்சி நிறுவனத்தில் 6, 7, 8 ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கான சாகச பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் 1188 இருபால் மாணவர்களும் 132 இருபால் ஆசிரியர்களும் பங்கேற்றனர். வளரிளம் பருவத்தினருக்கு வாழ்க்கைத்திறன் கல்வியை வலியுறுத்தும் நோக்கில் இம்முகாமில் ஒவ்வொருநாள் மாலையும் டிம் டிம் தாரே காணொளிப் பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

# குஜராத்தில் . . .

தளிர்த்திறன் திட்டத்தின் குஜராத்தி வடிவமான டிம் டிம் தாரா, குஜராத் மாநிலத்தில் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கப்பள்ளிகளில் தொடங்கப்பட்டது. அது, 2016ஆம் ஆண்டு முதல் காஸ்தூரிபா பெண்கள் உண்டுறைவிடப்பள்ளிகளிலும் (Residential Schools) 2019 ஜனவரி முதல் உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளிலும் செயற்படுத்தப்படுகிறது. அப்பள்ளிகளில் டிம் டிம் தாரா பாடங்களைப் பயில்வதாலும் பயிற்றுவிப்பதாலும் பயனடைந்தவர்கள் தாம் பெற்ற பயன்களைப் பகிர்கிறார்கள்.

## உண்டுறைவிடப்பள்ளியில் . . .

டாங் மாவட்டம் சப்பூட்ரா வட்டம் கிரிநகரில் அமைந்திருக்கும் கஸ்தூரிபா பெண்கள் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றுகிறார் திருமிகு **ஸீஸல்பென்**.



அவர், “இங்கு தங்கிப்படிக்கும் மாணவிகள் மிகவும் உள்ளடங்கிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு வாழ்க்கைத்திறன்களைப்பற்றித் தெரியாது. இங்கு அவர்களுக்கு டிம் டிம் தாரா காணொளிகள் வழியாக வாழ்க்கைத்திறன் கல்வியை வழங்குகிறோம். அதில் இடம்பெற்றுள்ள செயற்பாடுகள், விளையாட்டுகள், பங்கேற்று நடித்தல்கள், பாடல்கள் உள்ளிட்ட அனைத்திலும் அவர்கள் ஆர்வத்தோடு பங்கேற்றுக் கற்கிறார்கள். அதன் விளைவாக அவர்களிடம் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கவனிக்கப் பழகுக, மற்றவர்களை மதிக்கப் பழகுக, பிற பாலினரை மதிக்கப் பழகுக, பாலின உருவாக்கத்தை அறியப் பழகுக, இலக்கமைக்கப் பழகுக, வீணாக்காதிருக்கப் பழகுக ஆகியன உள்ளிட்ட பாடங்களிலிருந்து அவர்கள் பலவற்றைக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்; அவற்றால் அவர்களிடம் பல்வேறு நடத்தைமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, இவர்கள் தங்களுக்குள் பொருள்களை கடன்வாங்கிக்கொள்வார்கள்; ஆனால், அதற்காக முன்னர் ‘நன்றி’ கூற மாட்டார்கள். தற்பொழுது நன்றிகூறவும் பாராட்டவும் பழகி இருக்கிறார்கள். மின்விளக்குகள், மின்விசிறிகள், குழாய்கள் ஆகியவற்றை நிறுத்தி வீணாக்காதிருக்கப் பழகியிருக்கிறார்கள். முன்னரெல்லாம் இவர்களுக்குள் கருத்துவேறுபாடு வந்தால் கத்துவார்கள்; இப்பொழுது கூடியமர்ந்து பேசித்தீர்க்கிறார்கள். அன்போடு உரையாடி ஒற்றுமையோடு இருக்கிறார்கள். முன்பு, தேர்வுநாள் நெருங்கிவரும்பொழுது நாங்கள் தொடர்ந்து ஆற்றுப்படுத்தும்பணியைச் (Counseling) செய்வோம். தற்பொழுது அவர்கள் தன்னம்பிக்கைபெற்று இருக்கிறார்கள்; தங்களது இலக்கை அறிந்திருக்கிறார்கள். எனவே, தேர்விற்குப் பதட்டமும் பரபரப்புமின்றி ஆயத்தமாகிறார்கள். இவர்களுக்கு டிம் டிம் தாரா பாடங்களைக் கற்பிக்கத் தொடங்கிய பின்னர், மற்றவர்கள் கூறுவதை மிகவும் கவனமாகக் கேட்பது முதலிய பல்வேறு நடத்தை மாற்றங்கள் எனக்குள்ளும் ஏற்பட்டிருக்கின்றன” என்று கூறிப் புன்னகைக்கிறார்.

## மேல்நிலைப்பள்ளிகளில் . . .



அகமதாபாத்தில் உள்ள நாராயண் குரு வித்தியாலயாவில் பதினொன்றாம் வகுப்புப் பயிலும் திருமிகு **காசுவீ**, "டிம் டிம் தாரா காணொளிப் பாடங்கள் எங்களது படிப்பிற்கும் மிக உதவியாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, நினைவாற்றலால் வெல்லப் பழகுக பாடத்தில் "பரமிசியம்" (Paramecium) என்னும் சிற்றுயிரியின் அமைப்பை நினைவுகூர்வதற்கான வழி ஒரு மாறுபட்ட முறையில் விளக்கப்பட்டிருந்தது. அதன் வழியாக நினைவுகூரும் கலையை அறிந்துகொண்டேன். இந்த உத்தியைப் பயன்படுத்தி பிற உயிரிகளின் அமைப்புகளை எளிதாக நினைவுகூர்கிறேன். இந்த முறையைப் பயன்படுத்தும் பொழுது அவற்றை நீண்டகாலத்திற்கு நினைவுகூர முடியும்; மனப்பாடம் செய்யவேண்டியது இல்லை" என்கிறார்.

காந்திநகர் மாவட்டம் ராண்டிஷா வட்டத்திலுள்ள ஜெ.எஸ்.வித்தியாமந்திரில் பதினொன்றாம் வகுப்புப் பயிலும் திருமிகு **மகேஷ்**, "நான் அறிவியல் பிரிவைத் தேர்ந்தெடுக்க விரும்பினேன். ஆனால், 'அறிவியலைப் படிப்பது கடினம்; மேலும் நமது குடும்பச் சூழ்நிலையால் உனக்கு எங்களால் உதவமுடியாது' என்று என் பெற்றோர்கள் கூறினார்கள். அவர்களது எச்சரிக்கையும் மீறி பதினொன்றாம் வகுப்பில் அறிவியல் பிரிவில் சேர்ந்துள்ளேன். இங்கு டிம் டிம் தாராவின் கடினமாக உழைக்கப் பழகுக காணொளிப் பாடத்தைப் பார்த்தேன். அதில் நமது இலக்கை அடையக் கடினமாக உழைக்கவும் தடைகளை எதிர்கொள்ளவும் வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. எனவே, எனது இலக்கை அடைய நான் கடினமாக உழைக்க வேண்டும் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டேன். அவ்வாறே உழைத்து எனது இலக்கை அடைவேன்" என்கிறார்.





அதே வகுப்பில் பயிலும் திருமிகு **மான்ஸி**, "எனக்கு தேர்வுக்காலத்தில் இரவு நேரத்தில் நெடுநேரம் விழித்திருந்து படிக்கும் பழக்கம் உண்டு. இதனால் எனக்கு கண்ணெரிச்சலும் சோர்வும் ஏற்படும் டிம் டிம் தாராவின் "தேர்வை எதிர்கொள்ளப் பழகுக" காணொளியைப் பார்த்த பின்னர், இரவு நெடுநேரம் படிக்கக்கூடாது, குறிப்பிட்ட நேரத்திற்கு ஒருமுறை ஓய்வெடுக்க வேண்டும், அமைதியான சூழ்நிலையில் படிக்க வேண்டும் என்பனவற்றை அறிந்துகொண்டேன். அவற்றைப் பின்பற்றி இப்பொழுது படிக்கிறேன். முன்பெல்லாம் தேர்வுக்குக் கிளம்பும்பொழுதுதான் தேவையானவற்றை எடுத்து பைக்குள் வைப்பேன்; இப்பொழுதெல்லாம் முதல்நாள் இரவே அந்த வேலையை முடித்துவிடுகிறேன். அதனால் இப்பொழுது என்னால் பதட்டமின்றித் தேர்வெழுத முடிகிறது." என்கிறார்.

டிம் டிம் தாரா காணொளிப் பாடங்களால் மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் பலவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில துளிகளே இவை. இத்துளிகள் ஒரு தலைமுறை மாற்றத்தின் அடையாளங்கள் என்பதில் ஐயமில்லை.

# தமிழ்நாட்டில் . . .

தளிர்த்திறன் திட்டம் தமிழ்நாட்டில் பள்ளிகள், மாணவர் இல்லங்கள், அல்லரசு அமைப்புகள், கல்லூரிகள் எனப் பல்வேறுவிதமான இடங்களில் செயற்படுத்தப்படுகிறது. அவற்றின் தொடர்ச்சியாக கடந்த இரண்டு ஆண்டுகளாக திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கற்பட்டு, நாகபட்டினம் மாவட்டங்களில் 850 மாலைநேர ஓராசிரியர் பள்ளிகளில் 25,500 மாணவர்களுக்கு தளிர்த்திறன் திட்டத்தின் வழியாக வாழ்க்கைத்திறன் கல்வி வழங்கப்படுகிறது.



அதனைப்பற்றி அப்பள்ளிகளை நடத்தும் எஸ்.வி.ஆர்.டி.எஸ். நிறுவன ஒருங்கிணைப்பாளர் திருமிகு **பி.பி. விஜயராகவன்**, “எங்களது மாலைநேர ஓராசிரியர் பள்ளிகள் கிராமப் பகுதிகளில் அமைந்திருக்கின்றன. வழக்கமான முறைகளைப் பின்பற்றி வழங்கப்படும் கல்வி இவர்களுக்கு சலிப்பாக இருக்கிறது. அதனால், அவர்களின் படிப்பும் எந்திரத்தனமாக இருந்தது. இந்நிலையில்தான் தளிர்த்திறன் திட்டத்தை அவர்களுக்கு அறிமுகம் செய்தோம். பாடத்தைவிட விளையாட்டில் ஆர்வமுடைய அவர்கள், விளையாட்டின் வழியாகக் கற்றுத்தரப்படும் தளிர்த்திறன் திட்டப்பாடங்களை உற்சாகத்தோடு கற்கிறார்கள். அதில் கற்றல்முறை எளிதாக இருப்பதால், மெல்லக் கற்கும் மாணவர்களும் எளிதில் கற்றுக்கொள்கிறார்கள். அதன்விளைவாக அவர்களிடம் உற்சாகமும் தன்னம்பிக்கையும் பெருகியிருக்கின்றன; கல்வியின் மீது ஆர்வம் பூத்திருக்கிறது” என்கிறார்

# எதிரொலிகள்

தளிர்த்திறன் திட்டத்தின் பயன் உலகளாவி ஒளிவீச வாழ்த்துகிறேன். அதனது செயல்பரப்பும் இலட்சியத்தின் ஆழமும் சாதனைகளின் அமைதியும் அபராஜிதாவின் எதிர்கால விஸ்வரூபத்தை மிகத்தெளிவாகக் காட்டுகின்றன. வாழ்த்துக்கள்!

***- முனைவர் கமலம் சங்கர்***
*தமிழ்ப்பேராசிரியர் (ஓய்வு),*
*சென்னை, தமிழ்நாடு.*

உங்களது பரந்துவிரிந்த செயல்கள் எனது மனத்தில் ஆழப்பதிந்துள்ளன. அப்பணிகளைப்பற்றிய சுருக்கமான செய்தியை இம்மடல் நேர்த்தியாக வழங்குகிறது. இதனைப் படிப்பதற்காக உற்சாகத்தோடு காத்திருக்கிறேன்.

***- முனைவர் எஸ். ராதாகிருஷ்ணா***
*ஹைதராபாத், தெலுங்கானா.*

மீண்டுமொரு முறை பாராட்டுகள். நீடித்துநிலைக்கும் நன்முயற்சியைக் கண்டு மகிழ்கிறேன்!

***- செல்வி சந்தோசம்***
*நிர்வாகத் தலைவர்,*
*டி.வி.எஸ்.லட்சுமி வித்யா சங்கம், மதுரை, தமிழ்நாடு.*

மென்மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகள்.

***- லட்சுமி கிஷோர்***
*பெங்களூரு, கர்நாடகா.*

தளிர்த்திறன் திட்டத்தில் ஹிமாசல் பிரதேசம் இணைக்கப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சி. வரும்நாள்களில் மேலும் பல மாநிலங்களையும் இணைக்க அவ்வணியினருக்கு வாழ்த்துகள். மாணவர்களின் நடத்தை மாற்றங்களின் நிலையை அறிய தொழில்நுட்பத்தை (கைபேசிச் செயலி) பயன்படுத்தத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்க முன்னேற்றம். இது நேரத்தை மிச்சப்படுத்துவதோடு துல்லியமான தரவுகளையும் வழங்கும்.

***- எம். பாலகுரு***
*தலைமை நலவாய்ப்பு ஆட்சியர்,*
*அபராஜிதா குழுமம், மதுரை, தமிழ்நாடு.*

மற்றொரு வியத்தகு மடல். பாராட்டுகளும் வாழ்த்துகளும்!!

***- ஆயிஷா பரீன்***
*இணை வணிக மேலாளர்,*
*அபராஜிதா கார்ப்பரேட் சர்வீஸஸ் (பி) லிமிடெட், சென்னை, தமிழ்நாடு.*

கோடைக்கால வாழ்க்கைத்திறன் முகாம் ஐந்து நாள்களே நடந்தாலும் அதன் விளைவை ஆண்டுமுழுவதும் என் குழந்தைகளிடம் காணமுடிகிறது. ஆம். . . அவர்கள் அதனைப்பற்றி ஒவ்வொருநாளும் உரையாடுகிறார்கள்; அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள முகாமில் கலந்துகொள்ள ஆர்வத்தோடு காத்திருக்கிறார்கள்.

***- தி. மதுசூதனன்***
*மேலாளர்,*
*அபராஜிதா கார்ப்பரேட் சர்வீஸஸ் (பி) லிமிடெட், மதுரை, தமிழ்நாடு.*